மயிலாடுதுறை நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர்:திரு.அ.வீரமுத்துக்குமார்,பி.டெக்.,

நக.எண்: 4187/2023/எப்1 நாள்:04.07.2025

பொருள்: மனைப்பிரிவு – மயிலாடுதுறை நகராட்சி – வார்டு எண்–4, பிளாக் எண்– 23, சர்வே எண்கள்–1051/4 மற்றும் 5 இல் 26735.40 சதுரமீட்டர் பரப்பளவில் 10 மனைகளை கொண்டு அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப அனுமதி மற்றும் வரைபட ஒப்புதல் எண்: SWP/L.P/DTCP/Ma. Ma No:17/2023 – ன்படி அங்கீகாரம் அளித்து இறுதி உத்தரவு வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், மயிலாதுறை மாவட்டம் , அவர்களின் உத்தரவு, ந.க.எண். 535/2023/ம.மா2, நாள்.28.07.2023.
2. மயிலாடுதுறை எண்1 இணை சார் பதிவாளர் அலுவலகம் பத்திர ஆவண எண்:418/201 நாள்:01.03.2021.
3. மயிலாடுதறை நகராட்சி நகரமன்ற தீர்மான எண்.1056, நாள்.04.07.2025.

///////

உத்தரவு:

பார்வை1– இல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் மயிலாடுதுறை, அவர்களது உத்தரவின்படி வார்டு எண்–4, பிளாக் எண்–23, சர்வே எண்கள்– 1051/4 மற்றும் 5 இல் 26735.40 சதுரமீட்டர் பரப்பளவில் அமையும் 10 மனைகளை கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப அனுமதி மற்றும் வரைபட ஒப்புதல் எண்: SWP/L.P/DTCP/Ma. Ma No:17/2023 இன் படி ஒப்புதல் அளித்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட மனைப்பிரிவில் சாலை 825.80 சதுர மீட்டர், பொது உபயோகம் 16.25 சதுர மீட்டர் மற்றும் மின் வாரியத்திற்கு 13.19 சதுர மீட்டர் ஆகியவை பார்வை 2– இல் தானபத்திரம் மூலம் மனைப்பிரிவு உரிமையாளர் திரு.V.சீனிவாசன் என்பவரால் மயிலாடுதுறை நகராட்சி ஆணையருக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும் மனைப்பிரிவு அனுமதிக்கான பின்வரும் விவரப்படி கட்டணங்கள் மனைப்பிரிவு உரிமையாளரால் நகராட்சியில் செலுத்தப்பட்டது.

வ.எண்	கட்டணங்கள் விபரம்	கட்டணம் ரூ	செலுத்துச்சீட்டு எண் மற்றும் நாள்
1	மனைப்பிரிவு வளர்ச்சி கட்டணம்	5,000	097/001/1/24–25/0028999 நாள் : 10.01.2025
2	சாலை மற்றும் அடிப்படை வசதிகள் பராமரித்தல் கட்டணம்	1,00,000	097/001/1/23–24/0040143 நாள் : 10.03.2025
3	மின் விளக்கு கம்பங்கள் அமைத்தல் மின் வாரியத்திற்கு செலுத்தப்பட்டது	1,20,240	PGNIOB736306629 நாள் : 19.04.2025

4	மழைநீர் வடிகால் அமைத்தல் நகராட்சிக்கு செலுத்தப்பட்ட மதிப்பீட்டு கட்டணம்	3,10,000	097/001/01/24–25/0028397 நாள் : 10.01.2025
5	மின் விளக்கு அமைத்தல் நகராட்சிக்கு செலுத்தப்பட்ட கட்டணம்	36,000	097/001/1/24–25/0028398 நாள் : 10.01.2025

மேலும் சாலை மற்றும் பொதுப்பயன்பாட்டு இடம் நகராட்சி ஆணையர் என நில அளவை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது, மனைப்பிரிவில் அடிப்படை வசதிகளான பாதாள சாக்கடை குழாய், குடிநீர் குழாய் மற்றும் தார் சாலை போடப்பட்டுள்ளது என நகராட்சி பொறியாளர் சான்று அளித்துள்ளார். அனைத்து மனைகளுக்கும் நகராட்சியால் காலி மனை வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது. பார்வை 3– இல் கண்டுள்ளவாறு நகரமன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவு வழங்கப்படுகிறது.

இணைப்பு :

1. மனைப்பிரிவு வரைபடம் –1
2. மனைப்பிரிவு நிபந்தனைகள் –1

ஆணையாளர்,
மயிலாடுதுறை நகராட்சி.

பெறுநர்:

திரு.V.சீனிவாசன்,
94/186,பாரி நகர்,
திருச்சி மெயின்ரோடு,
காரைக்குடி.

நகல்:

1. 1–எண் இணை பதிவாளர் அலுவலகம், மயிலாடுதுறை.
2. மாவட்டநகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மயிலாடுதறை மாவட்டம்
3. நகராட்சி பொறியாளர் சாலை பதிவேட்டில் பதிவு செய்து தொடர் பராமரிப்பு செய்திட
4. கணினி அமைப்பாளர் (சொத்து பதிவேட்டில் கணினி பதிவு செய்திட தான பத்திர நகலுடன்)
5. வருவாய் அலுவலர் மயிலாடுதுறை நகராட்சி.
6. தனிவட்டாட்சியர், மயிலாடுதுறை அவர்களின் நடவடிக்கைக்கு,